நான்
ஹிஜாபுக்குள்
நுழைந்த கதை!
-யுவோன் ரிட்லி

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR -2014 MAY
மலர்: 7 இதழ்: 8 மே 2014 விலை: ரூ. 5




ஆட்சியாளர்களுக்கு
இறையச்சம்
தேவை!

# அன்பளிப்பின் சிறப்பு

● **நேசம் வளர்க்க...**

நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பளிப்புச் செய்து நேசத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: அல்அதபுல்முஃப்ரத் (594)

● **யாருக்கு முன்னுரிமை?**

நான் நபியவர்களிடம், ‘‘அல்லாஹ்வின் தூதரே! எனக்கு இரண்டு அண்டை வீட்டுக்காரர்கள் உள்ளனர். அவர்களில் யாருக்கு நான் (முதல்) அன்பளிப்பு செய்வது?‘‘ என்று கேட்டேன் அதற்கு நபியவர்கள், ‘‘அவ்விருவரில் யாருடைய வாசல் உன் வீட்டுக்கு அருகில் உள்ளதோ அவருக்கு அன்பளிப்பு செய்!‘‘ என்றார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) நூல்: புகாரி (2595)

● **பிள்ளைகளுக்கு நீதமாக அன்பளிப்புச் செய்தல்**

நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்களை அவர்களுடைய தந்தை நபியவர்களிடம் அழைத்துச் சென்று, ‘‘எனக்கு சொந்தமான அடிமையை எனது இந்த மகனுக்கு அன்பளிப்புச் செய்கின்றேன்‘‘ என்று சொன்னார்கள். அதற்கு நபியவர்கள், ‘‘உன் பிள்ளைகள் அனைவருக்கும் இதைப் போன்று அன்பளிப்புச் செய்துள்ளீரா?‘‘ என்று கேட்க, அதற்கு அவர் இல்லை என்றார். நபியவர்கள், ‘‘அன்பளிப்பை திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்‘‘ என்று கூறினார்கள். அறிவிப்பவர்: நுஃமான் பின் பஷீர்(ரலி) நூல்: புகாரி (2586)

● **பிரதி உபகாரம்**

நபியவர்கள் அன்பளிப்பை வாங்குபவர்களாகவும் அதற்குப் பதில் உபகாரம் செய்பவர்களாகவும் இருந்தார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) நூல்: புகாரி (2585)

● **சிறிதாயினும் முகமலர்ந்து ஏற்க வேண்டும்.**

நபியவர்கள் கூறினார்கள்: முஸ்லிமான பெண்களே! ஒரு அண்டை வீட்டுக்காரி மற்ற அண்டை வீட்டுக்காரிக்கு ஒரு ஆட்டின் கால் குளம்பை (அன்பளிப்பாக) கொடுத்தாலும் அவள் அலட்சியம் செய்ய வேண்டாம். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: புகாரி (2566)

● **இலஞ்சம் கூடாது**

*உங்களுக்கிடையே (ஒருவருக்கொருவர்) உங்கள் பொருட்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள்! தெரிந்து கொண்டே மக்களின் பொருட்களில் ஒரு பகுதியைப் பாவமான முறையில் சாப்பிடுவதற்காக அதிகாரிகளிடம் உங்கள் பொருட்களைக் கொண்டு செல்லாதீர்கள்! (அல்குர்ஆன் 2:188)*

நபியவர்கள் இலஞ்சம் வாங்குபவரையும் கொடுப்பவரையும் சபித்துள்ளார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ர¬லி) நூல்: திர்மிதி (1257)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்


THIRU QURAN NARCHEYDHI MALAR -2014 APRIL

மலர்: 7 இதழ்: 7 ஏப்ரல் 2014 விலை: ரூ. 5


## பொருளடக்கம்


அரசியல்வாதிகளுக்கு இறையச்சம் வேண்டும்! 2

ஆட்சியாளர்களை எழையாக்கிய இறையச்சம் 4

ஒவ்வொரு வெள்ளியும் நல்ல நாளே! 6

ஒரு வரலாற்று நாயகன் இஸ்லாத்தை ஏற்றபோது.... 8

கப்பலில் துளை போட்ட பயணிகள்! 11

மறுமைக்காக வறுமையை ஏற்ற வல்லரசர்கள். 12

கவர்ணர் மாளிகையில் கலீபா! 14

கண் நோய்க்கு மருந்து கூறும் குர்ஆன் 15

நான் ஹிஜாபுக்குள் நுழைந்த கதை! 17

குளிப்பை கடமையாக்கும் இறைமார்க்கம் 19

வாசகர் எண்ணம் 21

சுற்றுலாக்களும் படிப்பினைகளும் 22



published from

**House of Peace,**

PO Box No.1726

# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,

Bangalore 560 017 - Ph. 9886001357

**ஆசிரியர் உரை**

# அரசியல்வாதிகளுக்கு இறையச்சம் வேண்டும்!

ஒன்றே குலம், ஒருவனே இறைவன், அவனிடமே நம் மீழுதல் என்ற இந்த உண்மைகளை ஆழமாக விதைத்து மனிதன் இறைவனிடம் தன் செயல்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புணர்வுக்கு இறையச்சம் என்று வழங்கப்படும்.

அப்படிப்பட்ட நம்பிக்கையோடு இறைவனை நேரடியாக வணங்கவும் துதிக்கவும் மக்களைப் பழக்கப் படுத்தினால் அவர்கள் பாவங்களில் இருந்து விலகி இருப்பார்கள். யாரும் காணாதபோதும் இறை உணர்வு பாவச் செயல்களில் இருந்து அவர்களைத் தடுக்கும். அப்போது அவர்கள் இணையம், செல்பேசிகள், தொலைக்காட்சிகள் இவற்றை தகுந்த முன்னெச்சரிக்கையோடு கையாள்வார்கள். வார்த்தைகளை அளந்து பேசுவார்கள். பிறர் உரிமைகளையும் உடமைகளையும் மதிப்பார்கள். துன்பங்கள் நேரும்போது சகிப்புத்தன்மையும் பிறருக்காக தன உடமைகளையும் தியாகம் செய்யும் மனப்பான்மை அங்கு வளரும்.

● கல்வித்திட்டத்தில் இவற்றை உட்படுத்தினால் மாணவ மாணவிகள் கற்கும் கல்வியை ஆக்கபூர்வமான செயல்களுக்கு பயன்படுத்துவார்கள். சுயநலத்தை விட பொதுநலமே மிஞ்சும். கல்விப் பருவத்தில் குறுக்கிடும் காதல், பாலியல் வக்கிரங்கள், போதைப்பொருட்கள் போன்ற தீய சக்திகளின் தாக்கங்களில் இருந்து விடுபட்டு கருமமே கண்ணாக இருக்க இளைஞர்களுக்கு உதவும். தன் பெற்றோருக்கும் சமூகத்துக்கும் ஆற்றவேண்டிய கடமைகள் குறித்த விழிப்புணர்வோடு மாணவர்கள் வளர்வார்கள். தன்னம்பிக்கையும் ஆளுமையும் மேலிடுவதால் தோல்விகள் ஏற்படும்போது விரக்திக்கும் தற்கொலைகளுக்கும் ஆளாகமாட்டார்கள்.

● வணிகர்கள், முதலாளிகள், தொழிலாளிகள் உள்ளங்களில் இவை விதைக்கப்பட்டால் வணிகமும் தொழிலும் சீர்பெறும், நியாயமும் நேர்மையும் அங்கு கோலோச்சும். மனித உரிமைகள் பரஸ்பரம் மதிக்கப்படும்.

● குடும்ப அங்கத்தினர்களிடம் இவை விதைக்கப்பட்டால் பரஸ்பர நம்பிக்கை, உரிமைகள் பேணுதல், விட்டுக்கொடுத்தல், ஆதரவற்றோரை அரவணைத்தல், தியாக உணர்வு போன்ற பண்புகள் மிளிரும். குடும்ப உறவுகள் பலப்படும்.

● குற்றவாளிகளிடமும் கைதிகளிடமும் இவை விதைக்கப்பட்டால் எந்த தண்டனைகளாலும் செய்ய முடியாத அற்புத சீர்திருத்தங்களை அங்கு

செய்ய முடியும். அவர்கள் தன்னலம் மறந்த சமூக சீர்த்திருத்தவாதிகளாக மாறவும் வாய்ப்பு உண்டு.

● காவல் துறையினரிடமும் நீதித்துறையினரிடமும் அரசு அதிகாரங்களில் உள்ளோரிடமும் இவ்வுண்மைகள் விதைக்கப்பட்டால் அவரவர் கடமைகளை சரிவரப் பேணவும் மாற்றாரின் உரிமைகள் பேணவும் தூண்டும் பொறுப்புணர்வு அவர்களில் வளரும். அதிகார துஷ்பிரயோகங்கள் இலஞ்ச ஊழல்கள், அரசு இயந்திரங்களை சுயநலத்துக்கு பயன்படுத்துதல் போன்றவை முடிவுக்கு வரும்.

இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் ஈடுபடும் மக்களிடம் இந்த மறுக்க முடியாத உண்மைகளை உரிய முறையில் விதைத்தால் அங்கே நிகழும் புரட்சிகளை யாரும் அனுமானிக்க முடியும்.

அதேபோல.....

● இன்றுள்ள அரசியல்வாதிகளிடமும் அரசியல் முனைவோரிடமும், ஆட்சிப்பொறுப்பில் உள்ளோரிடமும் இறைவனுக்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும் என்ற உணர்வு ஊட்டப்பட்டு அதை அவர்கள் சரிவர உணர்ந்தால் அவர்களில் யாரும் ஆட்சிப்பொறுப்பை தேடி அலைய மாட்டார்கள்! ஏற்றவர்கள் அதை விட்டும் ஓடி ஒழிவார்கள்! ..... அல்லது ஏற்ற பொறுப்பை கண்ணும் கருத்துமாக நிறைவேற்றுவார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

● நீங்கள் ஆட்சிப் பதவியை அடைய ஆசைப்படாதீர்கள். ஆனால் மறுமை நாளிலோ அதற்காக வருத்தப்படுவீர்கள்' (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி 7148)

● "நினைவில் கொள்க! நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளே உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்பிலுள்ளவை பற்றி (மறுமையில்) விசாரிக்கப்படுவீர்கள். ஆட்சித் தலைவர் மக்களின் பொறுப்பாளர் ஆவார். அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார். ஆண் தன் குடும்பத்தாருக்குப் பொறுப்பாளன் ஆவான். அவன் தன் பொறுப்புக்குட்பட்டவர்கள் குறித்து விசாரிக்கப்படுவான். பெண் தன் கணவனின் வீட்டாருக்கும், அவனுடைய குழந்தைகளுக்கும் பொறுப்பாளி ஆவாள். அவள் அவர்கள் குறித்து விசாரிக்கப்படுவாள். ஒருவருடைய பணியாள் தன் எசமானின் செல்வத்திற்குப் பொறுப்பாளியாவான். அவன் அது குறித்து விசாரிக்கப்படுவான். நினைவில் கொள்க! உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே! உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புக்குட்பட்டவை குறித்து விசாரிக்கப்படுவீர்கள்." (நூல் புகாரி 7138)

ஆம், மறுமை நாளில் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றாதோருக்கு நரக நெருப்பின் வேதனையல்லவா காத்திருக்கிறது!

# ஆட்சியாளர்களை எழைகளாக்கிய இறையச்சம்!

**3:26. (நபியே!) நீர் கூறுவீராக: "அல்லாஹ்வே! ஆட்சிகளுக்கெல்லாம் அதிபதியே! நீ யாரை விரும்புகிறாயோ அவருக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய். இன்னும் ஆட்சியை நீ விரும்புவோரிடமிருந்து அகற்றியும் விடுகிறாய். நீ நாடியோரை கண்ணியப்படுத்துகிறாய். நீ நாடியவரை இழிவு படுத்தவும் செய்கிறாய். நன்மைகள் யாவும் உன் கைவசமேயுள்ளன. அனைத்துப் பொருட்கள் மீதும் நிச்சயமாக நீ ஆற்றலுடையவனாக இருக்கின்றாய்."**

ஆட்சிப் பொறுப்பு என்பது இறைவன் வழங்கும் அமானிதம் ஆகையால் அவர்கள் இறைவனால் விசாரிக்கப்படுவார்கள் என்ற பொறுப்புணர்வோடு ஆட்சியாளர்கள் செயல்பட வேண்டும். குடிமக்களின் குறைகள் நியாயமானதாக இருக்கும்பட்சம் அவை நிவர்த்தி செய்யப் படாமல் இருந்தால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள் இறைவன் முன் குற்றவாளிகளே. இந்த அச்சம் ஆட்சியாளர்களை பொறுப்புணர்வு மிக்கவர்களாக ஆக்குகிறது. அதனால் சரித்திரத்தில் பல இஸ்லாமிய ஜனாதிபதிகள் இரவுபகலாக கண்விழித்து மக்கள் சேவையாற்றினார்கள். காந்தியடிகள் கலீஃபா உமரின் ஆட்சி போன்று இந்தியாவில் வரவேண்டும் என்று ஆசைப்பட்டது இதனால்தான்.

இஸ்லாமிய வரலாற்றில் அவ்வாறு ஆட்சிப்பொறுப்பை ஏற்ற சான்றோர்கள் அவர்களாக அதைத் தேடி அலையவில்லை. மாறாக ஆட்சிப்பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்பட்டது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மரணிக்கும்வரை ஆன்மீகத் தலைமையும் அரசியல் தலைமையும் அவர் கைவசமே இருந்தது. இரு தலைமையும் ஒருசேர அவரிடம் இருந்தும் அவர் வாழ்ந்த எளிய வாழ்க்கை பிற்காலத்தவருக்கு முன்மாதிரியானது. அரசுக் கருவூலம் செல்வத்தால் நிரம்பி வழிந்தபோதும் அவரும் அவரது குடும்பத்தாரும் வறுமையிலேயே வாழ்ந்தனர். அரசுக் கருவூலத்தின் ஜகாத் எனப்படும் செல்வத்தை தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் மட்டுமல்ல பின்வரும் தன் தலைமுறையினர் அனைவருக்கும் சட்டவிரோதமாக்கி அறிவித்தார். அந்த கட்டளை இன்றும் பின்பற்றப்படுகிறது.

● ஒருமுறை அரசாங்கக் கருவூலத்தை சேர்ந்த பேரீத்தப்பழக் குவியலில் இருந்து தன் சிறுவயதுப் பேரன் ஹசன் எடுத்து வாயிலிட்ட ஒரு பேரீத்தம்பழத்தையும்கூட 'இது நமக்கு அனுமதிக்கப்பட்டது அல்ல, துப்பு துப்பு' என்று கூறி துப்ப வைத்தார் அந்த மாமனிதர்! சிறுவன்தானே அல்லது ஒரு பேரீச்சம்பழம்தானே என்று கூறி

அலட்சியம் காட்டவில்லை. அந்த அளவுக்கு அரசுப் பொருள் என்பது நெருப்பாக சுட்டது அந்த ஆட்சியாளருக்கு!

இறைவழிகாட்டலில் நின்று ஆட்சி நடத்திய அம்மாமனிதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் உட்கொண்ட உணவைப் பார்க்கின்ற போது மிகப்பெரும் ஆச்சரியமாகவே இருக்கின்றது. அரசர்கள் உண்ட உணவுகளை அவர்கள் கண்டதில்லை. ஏன் சராசரி மனிதன் உண்ணுகின்ற உணவைக் கூட அவர்கள் தொடர்ந்து உண்டதில்லை என்பதற்கு அவர்களின் தூய வரலாறு எமக்கு தக்க சான்றாக இருக்கின்றது.

● 'எங்கள் வீடுகளில் மூன்று மாதங்கள் அடுப்பு பற்ற வைக்கப் படாமலே கழிந்திருக்கிறது என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது 'என் சிறிய தாயாரே! அப்படியானால் உயிர் வாழ எதை உண்பீர்கள்? என்று நான் கேட்டேன். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள், 'பேரீச்சம் பழமும், தண்ணீரும் தான் எங்கள் உணவாக இருந்தது. சில நேரங்களில் பக்கத்து வீட்டைச் சேர்ந்த தோழர்கள் கறந்த பாலை அன்பளிப்பாகத் தருவார்கள் அதை அருந்துவோம்' என விடையளித்தார்கள். (அறிவிப்பவர்: உர்வா (ரலி), நூல்: புகாரி 2567,6459)

● 'நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் வயிறு ஒட்டிய நிலையில் படுத்திருந்ததை நான் பார்த்தேன். உடனே என் தாயார் உம்மு ஸுலைம் (ரலி) அவர்களிடம் வந்து இதைக் கூறினேன். 'அதற்கவர்கள், என்னிடம் ஒரேயொரு ரொட்டித் துண்டும், சில பேரீச்சம் பழங்களும் தான் உள்ளன. அவர்கள் மட்டும் வருவார்களானால் அவர்களின் வயிறு நிரம்பும். யாரையேனும் உடன் அழைத்து வந்து விட்டால் அவர்களுக்குப் போதாமல் போய் விடும்' என்றார்கள் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணியாளர் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: முஸ்லிம் 3802)

அன்னாரின் மரணத்துக்குப் பிறகு ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பின்னாள் ஜனாதிபதிகளின் வாழ்விலும் அதே வறுமையைக் கண்டது வரலாறு!

# பொய்யன் பட்டம் பெற....

'தான் கேட்டவற்றை அனைத்தையும் (அப்படியே பிறரிடம்) ஒருவன் கூறுவது என்பது, அவன் பொய்யன் என்பதற்கு போதுமா(ன சான்றா)கும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம்.

# ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நல்ல நாளே!

ஏதேனும் குறிப்பிட்ட வெள்ளிக்கிழமை மட்டுமல்ல, ஒவ்வொரு வெள்ளியும் நல்ல வெள்ளியே! நாட்களிலே சிறந்த நாள் இறைவனின் பார்வையில் வெள்ளிக்கிழமையே என்று தனது இறுதித் தூதர் வாயிலாக மனிதகுலத்துக்கு இறைவன் அறிவிக்கிறான்.

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

சூரியன் உதிக்கும் நாட்களில் வெள்ளிக்கிழமையே மிகவும் சிறந்த நாளாகும். அன்று தான் முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள் அன்றுதான் சொர்க்கத்திற்குள் அனுப்பப் பட்டார்கள் அன்றுதான் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அன்றுதான் யுக முடிவு நிகழும். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புகாரி 1548 )

ஆம், மனிதகுலம் சிறப்பாக கொண்டாடவேண்டிய நாள் இதுவே.. ஏனெனில் இன்றுதான் மனிதகுலம் பிறந்த நாள்! மனித சரித்திரத்தின் முதல் நாள்! நம்மை அளவில்லாத அன்போடும் கருணையோடும் அரவணைத்துக் கொண்டிருக்கும் எண்ணற்ற அருட்கொடைகளைப் பொழிந்துகொண்டு இருக்கும் இறைவனோடு தொடர்பு ஏற்பட்ட நாள் இதுவே. எவ்வளவு கொடுத்துவைத்தவர்கள் நாம்!

அவனது கருணைக்கும் அன்புக்கும் அரவணைப்புக்கும் அருட்கொடைகளுக்கும் நன்றி கூறும் வண்ணம் இந்த நாளை எப்படிக் கொண்டாடுவது என்பதையும் நமக்கு தன் திருத்தூதர் மூலம் கற்றுத் தருகிறான்:

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“வெள்ளிக்கிழமை குளிப்பது பருவமடைந்த ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.”

அறிவிப்பு: அபூசயீத் அல்குத்ரீ (ரலி) (புகாரி 1535)

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“எவரொருவர் வெள்ளிக்கிழமை தினத்தில் குளித்து சுத்தம் செய்துகொண்டு, தலையில் எண்ணை தேய்த்து,வாசனை திரவியங்களை தடவிக்கொண்டு பின்னர் பிறரை கடந்து செல்லாமல் பள்ளியினுள் நுழைந்து தனக்கு கடமையான தொழுகையை தொழுகின்றாரோ அவரது இரண்டு வெள்ளிக்கிழமைகளுக்கும் இடைப்பட்ட பாவங்கள் மன்னிக்கப்படும்” (ஆதாரம்:புகாரி)

பல சம்பவங்கள் அந்நாளிலே நடந்ததாக இறைவனின் தூதர் (ஸல்)

அவர்கள் அறிவிக்கிறார்கள். பின்வரும் நபிமொழியில் இருந்து அதை அறியலாம்:

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களிடத்தில் சிறந்த நாள் வெள்ளிக்கிழமை நாளாகும். அத்தினத்தில் தான் நபி ஆதம் (ஆலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அதிலேதான் அவர் மரணித்தார், அதிலேதான் மறுமை நாள் நிகழும், மனிதன் விசாரணைக்காக மீண்டும் எழுப்பப்படுவான். இத்தினத்தில் அதிகமதிகம் என் மீது ஸலவாத்து (நபிகளாருக்காக இறைவனிடம் கோரும் பிரார்த்தனை) சொல்லுங்கள், நிச்சயமாக நீங்கள் சொல்லக்கூடிய ஸலவாத்து என்னிடத்தில் எடுத்துக் காட்டப்படும், நபிமார்கள் உடலை பூமி உண்பதை (அழிப்பதை) விட்டும் இறைவன் தடுத்துள்ளான்" (ஆதாரம்: அஹ்மத்)

கிருஸ்துவ அன்பர்கள் இறைத்தூதர் இயேசு (அலை) அவர்கள் சிலுவையில் அறையப்பட்ட நாள் என்று அவர்கள் நம்பும் நாளை புனித வெள்ளி அல்லது பெரிய வெள்ளி அல்லது குட் பிரைடே என்றும் கூறி அனுஷ்டிக்கிறார்கள். இஸ்லாமிய நம்பிக்கைப்படி அவர்கள் சிலுவையில் அறையப்படவில்லை. அவ்வாறு அறையப்படுவதில் இருந்தும் இறைவனால் காப்பற்றப்பட்டு அவனளவில் உயர்த்திக் கொள்ளப்பட்டார் என்று திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான்.

**4:157.இன்னும், "நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் தூதராகிய – மர்யமின் குமாரராகிய–ஈஸா மஸீஹை கொன்றுவிட்டோம்" என்று அவர்கள் கூறுவதாலும் (யூதர்கள் சபிக்கப்பட்டனர்). அவர்கள் அவரைக் கொல்லவுமில்லை, அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை. ஆனால் அவர்களுக்கு (அவரைப் போன்ற) ஒருவன் ஒப்பாக்கப்பட்டான். மேலும் இ(வ்விஷயத்)தில் அபிப்பிராய பேதம் கொண்டவர்கள் அதில் சந்தேகத்திலேயே இருக்கின்றார்கள் – வெறும் யூகத்தைப் பின்பற்றுவதேயன்றி அவர்களுக்கு இதில் எத்தகைய அறிவும் கிடையாது. நிச்சயமாக அவர்கள், அவரைக் கொல்லவே இல்லை.**

**4:158.ஆனால் அல்லாஹ் அவரைத் தன் அளவில் உயர்த்திக் கொண்டான் – இன்னும் அல்லாஹ் வல்லமை மிக்கோனாகவும் ஞானமுடையோனாகவும் இருக்கின்றான்.**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

அவ்வாறு அந்த சம்பவம் நடந்த நாள் வெள்ளிக்கிழமையே என்றாலும் அது துக்கத்துக்கு உரியதல்ல, மாறாக அவர் யூதர்களின் சதியில் இருந்து அற்புதமான முறையில் காப்பாற்றப்பட்டார் என்பதால் அதுவும் மகிழ்ச்சிக்குரிய நாளே என்பது இஸ்லாமிய நம்பிக்கை!

# ஒரு வரலாற்று நாயகன் இஸ்லாத்தை ஏற்றபோது...

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்காவில் சத்தியப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த வேளை அது. மக்கள் சிறுகச்சிறுக இஸ்லாத்தில் தங்களை இணைத்துக்கொண்டு இருந்தனர்.

உமர் பின் கத்தாப் (கத்தாப் என்பாரின் மகனான உமர்) நல்ல வலிமையும் கம்பீரமான தோற்றமும் முரட்டு சுபாவமும் உடையவராக இருந்தார். அவரால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பலரும் பல வகையான தொந்தரவுகளை, எண்ணற்ற இன்னல்களை நீண்ட காலமாக அனுபவித்து வந்தனர். அறியாமைக் கால எண்ணங்களும் மூடப் பழக்க வழக்கங்களின் பிடிவாதமும், மூதாதையர்களின் மார்க்கத்தின் மீதிருந்த அலாதியான பற்றும் உமரை இஸ்லாத்துக்கு எதிராக செயல்பட வைத்தது.

ஒருநாள் நபி (ஸல்) அவர்களின் மீது அவருக்கிருந்த, அளவுமீறிய கோபத்தினால் வாளை ஏந்தி நபி (ஸல்) அவர்களின் கதையை முடித்துவிட வெளியேறினார். அப்போது நுஅய்ம் இப்னு அப்துல்லாஹ் (ரலி) என்பார் வழியில் குறுக்கிட்டார்.

'உமரே நீ எங்கு செல்கிறாய்?' என்று கேட்டார்.

'நான் முஹம்மதை கொல்லச் செல்கிறேன்.' என்றார்.

'அப்படியா.... முஹம்மதை கொலை செய்துவிட்டு ஹாஷிம், ஜுஹ்ரஹ் இவ்விரு கிளையார்களிலிருந்து பயமின்றி தப்பித்து வாழ முடியுமா உன்னால் ?' என்று அச்சுறுத்தினார் நுஅய்ம்.

அதற்கு, 'ஓஹோ..... நீயும் உனது மார்க்கத்தை விட்டுவிட்டு முஹம்மதின் மார்க்கத்திற்கு சென்று விட்டாயா?' என்று உமர் கூறினார்.

'உமரே! ஆச்சரியமான ஒன்றை நான் உமக்கு சொல்லட்டுமா?. .... உனது சகோதரியும் அவளது கணவரும் உனது மார்க்கத்தை விட்டுவிட்டு முஹம்மதின் மார்க்கத்துக்குச் சென்று விட்டனர் ... தெரியுமா உனக்கு?' என்றார் நுஅய்ம்.

இதைக் கேட்டதுதான் தாமதம். உமரின் இலக்கு மாறியது. முதலில் இவர்களை கவனிப்போம்.... அவர்களை நோக்கி சட்டென விரைந்தார் உமர்.

அங்கே சகோதரியின் வீட்டில்.....

நபித்தோழர்களில் ஒருவரான கப்பாப் (ரழி) அவர்கள் உமரின் சகோதரிக்கும் அவரது கணவருக்கும் தனது குர்ஆன் வசனங்கள் எழுதப்பட்ட ஏடுகளில் இருந்து 'தாஹா' எனத் தொடங்கும் திருக்குர்ஆன் அத்தியாயத்தின் வசனங்களை கற்றுக் கொடுத்துக்

கொண்டிருந்தார்கள். உமர் வருவதை அறிந்த கப்பாப் (ரழி) வீட்டினுள் மறைந்து கொண்டார். உமரின் சகோதரியும் அந்த ஏட்டை மறைத்து விட்டார்கள். எனினும், உமர் வீட்டிற்கு அருகே வந்தபோது கப்பாப் (ரழி) கற்றுக் கொடுத்த சப்தத்தை கேட்டு விட்டார் உமர்.

வீட்டிற்குள் நுழைந்ததும்....

'உங்களிடம் நான் செவிமடுத்த இந்த மெல்லிய சப்தம் என்ன?' என்று கேட்டார் உமர்.

'நாங்கள் பேசிக் கொண்டிருந்ததை தவிர வேறு எதுவும் இல்லையே' என்று அவ்விருவரும் கூறினார்கள்.

'சரி.... நீங்கள் மதம் மாறிவிட்டீர்களா?' என்று கேட்டார் உமர்.

'உமரே! உன்னுடைய மார்க்கத்தை தவிர வேறொன்றில் சத்தியம் இருந்தால் உன் கருத்து என்ன?' என்று துணிந்து கேட்டார் மைத்துனர்

கடுமையான கோபம் பொத்துக்கொண்டு வந்தது உமருக்கு. மைத்துனர் மீது பாய்ந்து அவரை பலமாகத் தாக்கி மிதிக்கவும் செய்தார். அவரது சகோதரி தனது கணவரை விட்டும் உமரை விலக்கினார். உமர் கடுமையாக தன் சகோதரியின் கன்னத்தில் அறைந்து அவரது முகத்தையும் ரத்தக் காயப்படுத்தினார்.

இப்போது அடங்கிப்போகவில்லை உமரின் சகோதரி.... கோபத்தில் வீரிட்டேழுந்தார்.

'உனது மார்க்கமல்லாத வேறொன்றில் உண்மை இருந்தாலுமா நீ ஏற்றுக்கொள்ள மறுப்பாய் உமர்? இதோ நன்றாகக் கேட்டுக்கொள்... அஷ்ஹது அன் லா இலாஹா இல்லல்லாஹூ வ அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹ்... (அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாரும் இல்லை, முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று நான் சாட்சி கூறுகிறேன்) என்று இஸ்லாத்தை ஏற்கும்போது கூறும் சத்தியப் பிரமாணத்தை உரக்கக் கூறினார்.

ஆடிப் போய்விட்டார் உமர்! தனது கோபம் பலனற்றுப் போனதைக் கண்டு உமர் நிராசை அடைந்தார். தனது சகோதரிக்கு ஏற்பட்ட ரத்தக் காயத்தைப் பார்த்து அவருக்கு கைசேதமும், வெட்கமும் ஏற்பட்டது.

'உங்களிடமுள்ள அந்த ஏடுகளை எனக்குக் கொடுங்கள். நான் அதை படிக்க வேண்டும்' என்று அவர் கூறினார்.

அதற்கு அவரது சகோதரி 'நீ அசுத்தமானவன். எழுந்து போய் குளித்து விட்டு வா' கறாராகக் கூறினார் சகோதரி.

குளித்துவிட்டு வந்தார் உமர்.

திருமறையை கையிலேந்தி 'பிஸ்மில்லார்ரஹ்மானிர்ரஹீம்' (அளவற்ற

அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்)என்று ஓதத் துடங்கினார் உமர்....... வியப்பில் ஆழ்ந்து போனார் அந்த மாவீரர்!

'ஆஹா! என்ன தூய்மையான சொற்கள்' என்று கூறினார். தொடர்ந்து 'தாஹா' என்று தொடங்கி பதினான்காவது வசனம் வரை தொடர்ந்து ஓதி முடித்தார்.

'எவ்வளவு அழகான சொற்கள்! எவ்வளவு இனிமையான வசனங்கள்! எனக்கு முஹம்மதைக் காட்டுங்கள்!' ... ஒரு கணமும் பொறுக்கமுடியவில்லை அவரால்....

உமர் பேசுவதைக் கேட்டு அதுவரை ஒளிந்திருந்த கப்பாப் (ரழி)....

'நற்செய்தி பெற்றுக் கொள்ளுங்கள் உமரே!. வியாழன் இரவு, 'அல்லாஹ்வே! உமர் அல்லது அபூஜஹ்ல் மூலமாக இஸ்லாமுக்கு உயர்வைக் கொடு!' என்று நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்வதை நான் கேட்டேன்.. நபி (ஸல்) அவர்கள் செய்த பிரார்த்தனை உங்கள் விஷயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று நான் உண்மையில் நம்புகிறேன்' என்றார் வெளியே வந்த கப்பாப்(ராலி)

தாமதமின்றி நபிகளைக் காணப் புறப்பட்டார் உமர். தனது வாளை அணிந்து கொண்டு நபி (ஸல்) அவர்களின் வீட்டை நோக்கி வந்தார்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் ஸஃபா மலையில் உள்ள ஒரு இல்லத்தில் தன் தோழர்களோடு இருந்தார்கள். உமர் வந்த வேளையில் நபி (ஸல்) அவர்கள் வீட்டின் உள்பகுதியில் வஹி (இறைச்செய்தி) வந்த நிலையில் இருந்தார்கள். உமர் கதவைத் தட்டியபோது தோழர்களில் ஒருவர் கதவின் இடுக்கின் வழியாக அவரை வாள் அணிந்த நிலையில் கண்டார். உடனே அங்கிருந்தோருக்கு அச்செய்தியைக் கூறினார்.

அங்கிருந்தவர்களில் நபிகளாரின் சிறிய தந்தை ஹம்ஜாவும் ஒருவர். அவர் ஏற்கனவே இஸ்லாத்தை ஏற்றிருந்தார்.. அவர் குறுக்கிட்டார்....

'ஓ! உமரா! வரட்டும், அவருக்கு கதவை திறந்து விடுங்கள்! அவர் நன்மையை நாடி வந்திருந்தால் அந்த நன்மையை நாம் அவருக்குக் கொடுப்போம்! அவர் தீமையை நாடி வந்திருந்தால் அவரது வாளாலேயே அவரை நாம் கொலை செய்து விடுவோம்!' என்று ஹம்ஜா (ரலி) கூறினார்கள். உமர் வந்தார், நபிகளாருக்காக காத்திருந்தார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு உமரை சந்தித்தார் நபி (ஸல்) அவர்கள்.... உமரின் சட்டையையும் வாளையும் பிடித்து அவரைக் குலுக்கி,

'உமரே! நீ வழிகேட்டிலிருந்து விலக மாட்டாயா? வலீதுக்கு ஏற்பட்டதைப் போன்ற கேவலத்தையும், தண்டனையும் அல்லாஹ் உனக்கு இறக்க வேண்டுமா? அல்லாஹ்வே! இதோ உமர் இப்னு கத்தாப்

வந்திருக்கிறார். அல்லாஹ்வே! உமரால் இஸ்லாமிற்கு உயர்வைக்கொடு!' என்று கூறினார்கள்.

உமர் (ரழி) 'அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ் வ அன்னக்க ரஸூலுல்லாஹ்' என்று கூறி இஸ்லாமைத் தழுவினார். (பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அல்லாஹ்வின் தூதர் நீங்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்.)

இதனைப் பார்த்த வீட்டில் உள்ளவர்கள் அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெயரிவன்) என்று முழங்கினார்கள்.

ஆம், உலக வரலாற்றில் அழியாத சுவடுகளுக்கு சொந்தக்காரரின் முதல் காலடித் தடம் அது!

# கப்பலில் துளை போட்ட பயணிகள்!

ஒரு சமூகமாக நாம் வாழும்போது விரும்பியவர் விரும்பியதை செய்து கொள்ளட்டும். நாம் என் கவலைப் பட வேண்டும். நாம் உண்டு, நம் பிழைப்பு உண்டு.... என்று நினைப்பவர்களே நம்மில் அதிகம் பேர். இந்த போக்கு சரியானதா? .... இல்லை என்கிறார் இறைவனின் இறுதித் தூதராக வந்த நபிகள் நாயகம்(ஸல்). அதை விளக்க கீழ்கண்ட உவமையை அவர்கள் கூறினார்கள்:

இறைவன் வழங்கும் சட்ட வரம்புகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பவனுக்கும் அவற்றை மீறி நடப்பவனுக்கும் உவமை - ஒரு சமுதாயத்தைப் போன்றதாகும். அவர்கள் கப்பலில் (தங்களுக்கு இடம் பிடிப்பதற்காகச்) சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். (அதன்படி) அவர்களில் சிலருக்குக் கப்பலின் மேல் தளத்திலும் சிலருக்குக் கீழ்த் தளத்தில், இடம் கிடைத்தது. கீழ் தளத்தில் இருந்தவர்களுக்குத் தண்ணீர் தேவைப்பட்டபோது (அதைக் கொண்டு வர) அவர்கள் மேல் தளத்தில் இருப்பவர்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. (அதனால் மேலே இருந்தவர்களுக்குச் சிரமம் ஏற்பட்டது). அப்போது, கீழ்த் தளத்தில் இருந்தவர்கள் (தமக்குள்) 'நாம் (தண்ணீருக்காக) நம்முடைய பங்கில் (கீழ்த் தளத்தில்) ஓட்டையிட்டுக் கொள்வோம், நமக்கு மேலே இருப்பவர்களைத் தொந்தரவு செய்யாமலிருப்போம்' என்று பேசிக் கொண்டார்கள். அவர்கள் விரும்பியபடி செய்து கொள்ள அவர்களை மேல் தளத்தில் உள்ளவர்கள் விட்டுவிட்டால் (கப்பலில் இருப்பவர்கள்) அனைவரும் அழிந்து போவார்கள். (ஓட்டையிட விடாமல்) அவர்களின் கரத்தைப் பிடித்துக் கொள்வார்களாயின் அவர்களும் தப்பிப் பிழைத்துக் கொள்வார்கள். (அவர்களுடன் மற்ற) அனைவரும் தப்பிப் பிழைத்துக் கொள்வார்கள். என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, திர்மிதீ)

# மறுமைக்காக வறுமையை ஏற்ற வல்லரசர்கள்

நபிகள் நாயகமும் சரி, அவருக்குப்பின் வந்த கலீபாக்களும் சரி, சொந்தத் தேவைக்காக அரசுப் பணத்தில் கை வைப்பது இஸ்லாமியச் சட்டத்திற்கு முரணானது என்பதால் அதில் மிக உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். அதனால்தான் அரசுக்கருவூலம் நிரம்பி வழிந்தபோதும் சொந்த வாழ்வை வறுமையிலேயே கழித்தனர்.

நபிகளாரின் மரணத்துக்குப் பிறகு ஆட்சிப்பொறுப்பை ஏற்றவர் கலீஃபா அபூபக்கர்(ரலி). (கலீஃபா என்றால் ஜனாதிபதி அல்லது மக்களின் தலைவர் என்று பொருள்.)

● ஆட்சியாளராக பதவி ஏற்ற பின் ஜனாதிபதி அபுபக்கர் தனது மக்களிடம் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துகிறார்.

'மனிதர்களே! உங்கள் தலைவனாக நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். நான் உங்கள் எல்லோரையும் விடவும் சிறந்தவன் என்று நான் எண்ணவில்லை. நான் சத்தியம் தவறாது நடந்தால் நீங்கள் எனக்குத் துணையாக இருக்க வேண்டும். நான் பிழை செய்தால் நீங்கள் என்னைத் திருத்த வேண்டும். உங்கள் விவகாரங்களில் நான் இறைவனின் கட்டளைப்படி நடந்து கொள்ளும் போது நீங்கள் எனக்கு கட்டுப்பட வேண்டும். இறைவனின் தூதர் சென்ற வழியில்தான் நானும் செல்வேன். நான் நேர்மையை கைக் கொண்டு ஒழுகினால் நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள். நான் கோணல் வழி சென்றால் என்னை நேர்வழிப்படுத்துங்கள்.' - (ஹூகூகல் இன்சான், பக்கம் 160)

● அவர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும் அரசு அலுவல்கள் காரணமாக அதுவரை செய்துகொண்டிருந்த வியாபாரத்தை தொடர முடியாததால் அவர் அரசுக் கருவூலத்தில் இருந்து ஒரு ஊதியத்தை பெற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டார். ஒரு சிறு தொகையை ஊதியமாகப் பெற அவரும் ஒப்புக்கொண்டார். எளிமையான வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கையில் ஒருநாள் தன் மனைவி உணவோடு ஒரு இனிப்புப் பதார்த்தத்தையும் பரிமாறினார். ஆச்சரியப்பட்ட அபூபக்கர் 'இது எங்கிருந்து உனக்கு?' என்று மனைவியை வினவினார்.

"நீங்கள் தினமும் செலவுக்குத் தரும் பணத்தில் இருந்து சிறுகச்சிறுக சேமித்து வைத்தேன். அதில் இருந்து செய்ததுதான் இந்த இனிப்பு"

"சேமிக்கும் அளவுக்கு நான் ஊதியம் பெற்று வந்துள்ளேனா? இது கூடாது!" என்றார் அபூபக்கர்.

தன் அடுத்தமாதம் முதல் ஊதியத்தின் அளவைக் குறைக்க

ஆணையிட்டார் அபூபக்கர்!

ஊதிய உயர்வு கோரி போராட்டங்கள் நடப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஊதியக் குறைவு கோரிப் போராடியவர் பற்றி எங்காவது கேட்டிருக்கிறோமா?

● அபூபக்கர் அவர்களுக்குப் பிறகு ஆட்சிப்பொறுப்பை ஏற்றவர் உமர்(ரலி) அவர்கள். இவரது ஆட்சியில் மதீனாவில் தோன்றிய சிற்றரசு சில ஆண்டுகளில் மாபெரிய பேரரசானது. அன்றைய வல்லரசுகள் உமரின் காலடியில் வீழ்ந்தன. பாரசீகம், இராக், சிரியா, பாலஸ்தீனம், லிபியா, எகிப்து, ஆர்மீனியா, இன்றைய ஆப்கானிஸ்தானின் சில பகுதிகள் வரை அவரது சாம்ராஜ்ய எல்லை விரிந்தது. அவ்வளவு பெரிய வல்லரசுகளை ஆட்டிப்படைத்த கலீபா உமரின் வாழ்வு எவ்வாறு இருந்தது? இதோ . 18 ம் நூற்றாண்டின் இங்கிலாந்தில் மிகவும் பிரபலமான வரலாற்றாசிரியர் கிப்பன் அந்தஆச்சரியத்தை வெளிப்படுத்துகிறார்:

"தொலிக்கோதுமையினால் செய்யப்பட்ட ரொட்டி அல்லது பேரீத்தம் பழங்களே அவரது உணவாகவும், சாதரண தண்ணீரே அவரது பானமாகவும் இருந்தது. அவரது சட்டை பணிரெண்டு இடங்களில் தையல் போடப்பட்டிருந்தது. பாரசீக இராஜதந்திரி ஒருவர் மரியாதை நிமித்தமாக அவரை சந்திக்க மதீனாவுக்கு வந்த போது பள்ளிவாசலின் படிக்கட்டுகளில் ஏழைகளோடு ஏழையாக உமர் உறங்கிக் கொண்டிருக்க கண்டார்."

(***Gibbon*** - தனது ***In The Decline and Fall of the Roman Empire*** என்ற நூலில்)

● உமர் என்ற பெயரைக்கொண்ட இன்னொரு கலீஃபாவை பிற்காலத்தில் சரித்திரம் கண்டது. அவர் தான் உமர் பின் அப்துல் அஜீஸ் என்பார். ஒரு சமயம் அவருக்குத் தனிப்பட்ட செலவுக்காக ஒரு திர்ஹம் தேவைப்பட்டது. தம் மனைவி பாத்திமாவிடம் வந்து, "கைச் செலவுக்குப் பணம் வேண்டும். ஒரு திர்ஹம் இருந்தால் தா" என்று கேட்டார் கலீஃபா.

மனைவிக்குச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. "இவ்வளவு பெரிய ஆட்சியாளராக இருந்தும் ஒரு திர்ஹம்கூட உங்களிடம் இல்லையே?" என்றார். கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் அமைதியாகக் கூறினார்: "நரகத்தின் நெருப்பு விலங்குகளைவிட இந்த நிலைமை மேலானது." பாத்திமா பொங்கி வந்த அழுகையை அடக்கிக்கொண்டார்.

இறையச்சத்துடனும் மறுமையில் பதில் சொல்ல வேண்டும் என்ற உணர்வுடனும் ஒரு நாடு ஆளப்பட்டால் இந்த உலகமே சுவனமாக மாறிவிடும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

# கவர்னர் மாளிகையில் கலீபா!

எளிமையானவர் என்று பெயரெடுத்தவர் நபித்தோழர் அபுதர்தா (ரலி). நபிகளாரின் மறைவுக்குப் பின் உமர் ரலி அவர்கள் ஜனாதிபதியாக இருந்தபோது சிரியாவுக்கு அவர் ஆளுநராக நியமிக்கப் பட்டு இருந்தார். சிரியாவை மேற்பார்வை இட வந்திருந்தார் ஜனாதிபதி உமர். அபுதர்தாவை அவரது விட்டில் சந்திக்கப் போனபோது அவரது வீட்டில் விளக்கு இல்லை. ஒரே இருட்டு. வந்தவரை வரவேற்று அமரச்செய்தார் அபுதர்தா. இருவரும் இருட்டில் அமர்ந்து கொண்டு உரையாடினார்கள்.

உரையாடலின் போது அபுதர்தா தலையணையாக பயன்படுத்திய பொருள் கைக்கு தட்டுப்பட்டது. அது குதிரையின் சேணம் என்பதை புரிந்து கொண்டார் உமர். அவர் படுக்கும் இடத்தை தடவிப்பார்த்த பொது அங்கு எங்கும் பொடிக்கற்களாக இருந்தது. அவர் பயன்படுத்திய போர்வை டமாஸ்கஸின் குளிரை தாங்கக்கூடியதாகவும் இருக்கவில்லை.

ஜனாதிபதி உமர் கவலை கொண்டவராக ஆளுனரை விசாரித்தார்... "நான் உங்களுக்கு சற்று வசதியை செய்து தரலாமா? உங்களுக்கு எதையாவது அனுப்பட்டுமா?"

உடனே அபுதர்தா(ரலி) நபிகளாரின் கூற்றை நினைவு படுத்தினார்... "ஒரு வழி யாத்திரைக்காரனுக்கு எவ்வளவு தேவையோ அந்த அளவுக்கே இவ்வுலகில் உங்கள் தேவைகளை போதுமாக்கிக் கொள்ளுங்கள்". இதைக் கேட்ட மாத்திரத்திலேயே இருவரும் அழு ஆரம்பித்தார்கள். இந்த சோகமான நினைவிலேயே இரவைக் கழித்தனர் அந்த சரித்திரம் படைத்த ஆட்சியாளர்கள்.

மறுமையில் வாய்க்க இருக்கும் சொர்க்கப் பேற்றிற்காக தன்னலங்களை பொதுநலத்திற்காக தியாகம் செய்த உத்தமர்கள் அவர்கள்.

**உலக வாழ்க்கை வீணும் விளையாட்டுமேயன்றி வேறில்லை பயபக்தியுடையவர்களுக்கு நிச்சயமாக மறுமை வீடே மிகவும் மேலானதாகும் நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டாமா? (திருக்குர்ஆன் 6:32)**

# மறையே மருந்து

● இன்னும், நாம் இறைநம்பிக்கையாளர்களுக்கு அருட்கொடையாகவும் அருமருந்தாகவும் உள்ளவற்றையே குர்ஆனில் இறக்கிவைத்தோம்........ (திருக்குர் ஆன் 17:82)

● மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு நிச்சயமாக ஒரு நல்லுபதேசமும் வந்துள்ளது. (உங்கள்) இதயங்களிலுள்ள நோய்களுக்கு அருமருந்தும் (வந்திருக்கிறது) மேலும் இறைநம்பிக்கையாளர்களுக்கு நேர்வழிகாட்டியாகவும், நல்லருளாகவும் உள்ளது. (திருக்குர் ஆன்10:57)

# கண் நோய்க்கு மருந்து கூறும் குர்ஆன்!

எகிப்து நாட்டு மருத்துவர் பேராசிரியர் ''அப்துல் பாஸித் முஹம்மத்'' என்பவர் ''கண் வெண்மையாதல்'' நோய்க்கு குர்ஆன் அடிப்படையில் மருந்து கண்டு பிடித்துள்ளார் என்று கத்தார் நாட்டின் ''அர்-ரயா'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தி மேலும் கூறுவதாவது:

ஒரு நாள் காலையில் குர்ஆன் ஓதிக்கொண்டிருக்கும் போது, சூறா யூசூப்பின் 84ம் வசனம் இந்த டாக்டரின் கவனத்தை ஈர்த்தது

*12:84.* **பின்னர் அவர்களை விட்டுத் திரும்பி "யூஸுஃபைப் பற்றி (எனக்கு ஏற்பட்டுள்ள) துக்கமே!" என்று (வியாகூலப்பட்டுக்) கூறினார் துக்கத்தால் (அழுது அழுது) அவருடைய இரண்டு கண்களும் வெளுத்து(ப் பஞ்சடைந்து) விட்டன - பிறகு அவர் (தம் துக்கத்தை) விழுங்கி அடக்கிக் கொண்டார்.**

எனவே தொடர்ந்து உள்ள வசனங்களை கூர்ந்து வாசித்தார். அதில் 93ம் வசனம் இன்னும் சிந்திக்கத்தூண்டியது.

*12:93.* **"என்னுடைய இந்தச் சட்டையை நீங்கள் எடுத்துக் கொண்டு சென்று, என் தந்தையாரின் முகத்தில் போடுங்கள் அவருக்குக் கண்பார்வை வந்துவிடும் இன்னும் உங்களுடைய குடும்பத்தார் அனைவரையும் என்னிடம் கொண்டு வாருங்கள்" (என்று கூறினார்).**

84ம் வசனத்தில் யாகூப்(அலை) அவர்கள் தன் மகன் யூசுப்(அலை) அவர்களின் பிரிவால், அழுது அழுது கண்கள் வெளுத்து பார்வை இழந்துவிட்டது எனக்கூறுகிறது.

தொடர்ந்து 93ம் வசனமோ அவரின் கண்பார்வை மீள பெறப்பட்ட ஒரு முறையை கூறுகிறது. அதாவது, யூசூப்(அலை) அவர்கள் தனது சட்டையை கொடுத்தனுப்பி, அதை தந்தையின் முகத்தில் போடுமாறும், அதன் மூலம் அவரது பார்வை மீண்டுவிடும் என்றும் கூறிய சம்பவம் இடம் பெறுகிறது. எனவே, தொடர்ந்து சிந்தித்தார்.

யூசூப் (அலை) கொடுத்தனுப்பிய சட்டையில் என்ன இருந்திருக்க முடியும்? என்று யோசித்த போது, வியர்வையை தவிர வேறு ஒன்றும் இருந்திருக்க வாய்ப்பில்லை என்று தோன்றியது. எனவே, ஆய்வு கூடத்தில் வியர்வையை வைத்து ஆய்வுகளை தொடங்கினார்.

எனவே, முயல்களிலும், இன்னும் ஆய்வுக்கேற்ற விலங்குகளிலும் இது தொடர்பான பரிசோதனைகளை செய்தபோது வெற்றிக்கான சாத்தியம் ஏராளம் தென்பட்டது.

எனவே இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ள 250 நோயாளிகளுக்கு தினமும் இரண்டு மருந்து சொட்டுகள் வழங்கி சோதனையை தொடங்கினார். அதில் 99மூ வெற்றியான முடிவு கிடைத்தது.

எனவே இந்த கண்டுபிடிப்பை ஐக்கிய அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பதிவு செய்து அதன் காப்புரிமையை பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர், சுவிஸ் நாட்டின் மருந்து தயாரிக்கும் நிறுவனத்துடன் ஒப்பந்த அடிப்படையில் இம்மருந்து உற்பத்தியை தொடங்கினார்.

இந்த மருந்தில் ''குர்ஆனின் மருந்து / ***Medicine of Qur'an"*** என்று தெளிவாக குறிப்பிட வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். அதை அந்த நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

***17:82.* இன்னும், நாம் மு:.மின்களுக்கு ரஹ்மத்தாகவும், அருமருந்தாகவும் உள்ளவற்றையே குர்ஆனில் (படிப்படியாக) இறக்கிவைத்தோம் ஆனால் அக்கிரமக்காரர்களுக்கோ இழப்பைத் தவிர வேறெதையும் (இது) அதிகமாக்குவதில்லை.**


செய்தி மூலம்: ***http://medicapharm.com/medicine-of-quran.html***

# அன்றே சொன்னார் நபிகள்...

“ஓர் அவையில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மக்களுக்கு அறிவுரை வழங்கிக்கொண்டிருந்த போது அவர்களிடம் நாட்டுப் புறத்து அரபி ஒருவர் வந்தார். “மறுமை நாள் எப்போது எனக் கேட்டார். நபி (ஸல்) அவர்கள் தங்களின் பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது (அங்கிருந்த) மக்களில் சிலர் “நபி ஸல் அவர்கள் அம்மனிதர் கூறியதைச் செவியுற்றார்கள் எனினும் அவரின் இந்தக் கேள்வியை அவர்கள் விரும்பவில்லை“ என்றனர். வேறு சிலர், “அவர்கள் அம்மனிதர் கூறியதைச் செவியுறவில்லை“ என்றனர்.

முடிவாக நபி (ஸல்) அவர்கள் தங்களின் பேச்சை முடித்துக் கொண்டு, “மறுமை நாளைப் பற்றி (என்னிடம்) கேட்டவர் எங்கே?“ என்று கேட்டார்கள். உடனே (கேட்டவர்)“ இறைத்தூதர் அவர்களே! இதோ நானே“ என்றார். அப்போது கூறினார்கள்.“ அமானிதம் பாழ்படுத்தப்பட்டால் நீர் மறுமை நாளை எதிர் பார்க்கலாம்.’’ அதற்கவர், “அது எவ்வாறு பாழ்படுத்தப்படும்?“ எனக் கேட்டதற்கு, “எந்தக் காரியமாயினும் அது, தகுதியற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டால் நீர் மறுமை நாளை எதிர்பாரும்“ என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி 59)

**நான் ஹிஜாபுக்குள் நுழைந்த கதை!**



# தாய்மை என்ற ஒப்பற்ற பதவி!

மூலம்: யுவோன் ரிட்லி, ஆங்கில பத்திரிகையாளர்
தமிழில்: சிஃபாயியா மரியம்
கட்டுரை தொடர்ச்சி

செப்டெம்பர் 2001ல், நான் ஆஃப்கானிஸ்தான் எல்லையில் புர்கா அணிந்து திருட்டுத்தனமாக நுழைய முற்பட்டபோது, தாலிபான் இயக்கத்தினரால் கைது செய்யப்பட்டேன். அச்சம்பவம் என்னை மிகுந்த பயத்துக்குள்ளாக்கியது.

ஆனால் அந்த சிறைவாசமே நான் கொண்டிருந்த இஸ்லாமியப் பெண்கள் பற்றிய கண்ணோட்டத்தை மாற்றியது.

நான் சிறைப்பட்டிருந்த அந்த 10 நாட்களின்போது தாலிபான்களோடு நான் ஒரு ஒப்பந்தம் செய்திருந்தேன். அந்த ஒப்பந்தம் என்னவென்றால், நான் திருக்குர்ஆனை ஓதி இஸ்லாத்தைக் கற்றுக்கொள்வேன் என்பதுதான். பல முயற்சிகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் பின்பு அந்த ஒப்பந்தம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு என்னை விடுவித்தனர். நானும் அதன் பிறகு அவர்களோடு செய்திருந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றினேன். மத்தியக் கிழக்கு நாடுகளின் பத்திரிக்கையாளராக, இஸ்லாம் என்ற ஒரு முழுமையான மார்க்கத்தைப் பற்றி எனது அறிவை வளர்த்துக்கொள்ள அதை ஒரு வாய்ப்பாகக் கருதினேன். நான் இப்படிச் சொல்வது எனக்கு ஏற்பட்ட ***Stockholm Syndrome*** என்று யாரும் எண்ணவேண்டாம். அப்படி பாதிப்புக்குள்ளானால் நான் என்னைக் கைது செய்தவர்களிடம் பிணைப்பு வைத்திருக்க வேண்டும். நான் சிறைப்பட்டிருந்த நாட்களில் நான் அவர்களைத் துப்பியும், சூழுரைத்தும், சபித்தும், அவதூறு பேசியும் அவர்களை மிகவும் சிரமத்துக்குள்ளாக்கி இருந்தேன். அவர்கள் கொடுத்த உணவினை உண்ணாது உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினேன். என்னை விடுவித்தது யாருக்கு அதிக மகிழ்ச்சி, எனக்கா? அவர்களுக்கா?

திருக்குர்ஆனைப் படிக்க ஆரம்பித்தபோது அதை வெறும் ஒரு பாடநூல் போல எண்ணினேன். ஆனால், அதில் பெண்களை ஆன்மீகத்திலும் கல்வியிலும் மதிப்பிலும் சமமாக பாவித்து விவரித்திருப்பதைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தேன். பெண்கள் மேற்கொள்ளும் கற்பகாலம் மற்றும் பிரசவ முறையும் அவர்களின் குழந்தை வளர்ப்பும் இறைவன் அவர்களுக்கு அளித்திருக்கும்

அன்பளிப்புக்குரிய குணாதிசயங்களாக எனக்குப் பட்டது. இஸ்லாமியப் பெண்கள் தங்களை இல்லத்தரசிகள் என்று பெருமிதத்துடன் கூறிக்கொண்டதையும் கண்டேன். மேலும் நாயகம் முஹம்மத்(ஸல்) அவர்கள் ஒரு வீட்டின் முக்கிய நபராக முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாம் முறையாகவும் ''தாய்'' என்ற பெண்ணையே குறிப்பிடுகின்றார். மேலும் அவர் ''தாயின் காலடியின் கீழ் சொர்க்கத்தைக் காணலாம்'' என்றும் கூறுகிறார். எவ்வளவு பெரிய அந்தஸ்து! இந்த உலகில் எத்தனைப் பெண்கள் தாய்மைக்காக முதல் 100 சக்தி வாய்ந்தோர் பட்டியலில் சேருவார்கள்?

அதன் பிறகு வேலைக்குச் சென்று உயர் பதவி வகிக்கும் சகோதரிகளை எவ்வாறு மரியாதையுடன் எண்ணுவேனோ அதைப் போன்று இஸ்லாம் கூறியபடி இல்லத்தரசியாக இருந்து குழந்தைகளைப் பெற்று வளர்ப்பவர்களையும் ஒரு புதிய உயர்வோடும் மரியாதையோடும் என்னால் காண முடிந்தது.

பின்பு இஸ்லாத்தில் கூறப்பட்ட வாரிசு உரிமை, வரி, சொத்து மற்றும் விவாகரத்து சம்மந்தமான சட்டங்களைப் பற்றியும் தெரிந்துகொண்டேன். இவைகளை அப்படியே ஹாலிவுட்டின் விவாகரத்து வழக்கறிஞர்கள் பின்பற்றுவதுபோல் எனக்குத் தோன்றியது. அங்கு விவாகரத்தின்போது பெண்கள் தங்கள் பெயரில் உள்ள சொத்தைத் அப்படியே தக்கவைத்துக் கொள்வார்கள், ஆண்களின் பாதி சொத்தையும் விவாகரத்தின்போது கறந்து விடுவார்கள்!

இங்கு இஸ்லாமியப் பெண்கள் முறையாக திருமண பந்தத்தில் ஈடுபட்டு வாழ்கின்றனர். இந்த முறையில் அவர்கள் அலுவலக வேலை செய்ய முற்பட்டாலும் அல்லது இல்லத்தரசியாக இருக்க விரும்பினாலும் அதற்குத் தடை இல்லை. அவர்கள் தாங்கள் ஈட்டிய பணத்தையும் தங்கள் விருப்பப்படி செலவிட்டு, தங்கள் கணவரின் வருமானத்தையும் வீட்டுச் செலவிற்காக உபயோகம் செய்கின்றனர்.

நான் முன்பு கூறியது போல இஸ்லாம் தாய்மையையும் மனைவியின் நிலையையும் மிக மிக உயர்த்தியே வைக்கிறது. இஸ்லாமியப் பெண்கள் வீட்டிலிருக்க எண்ணினாலும் அங்கு தடை இல்லை. அவர்கள் இல்லத்தரசியாக இருப்பதும் தங்கள் குழந்தைகளின் முதல் ஆசிரியராக சேவை செய்வதும் அவர்களுக்கு பெருமைக்குரிய செயலாகவே கருதப்படுகிறது. அதே போன்று திருக்குர்ஆனும் அவர்கள் வேலைக்குச் செல்வதையும், தொழிற்கல்வி கற்பதையும் அரசியலில் ஈடுபடுவதையும் ஊக்குவிக்கின்றது. எத்துறையில் சாதிக்க விரும்பினாலும் அதை இறைவரம்புகளுக்கு உட்பட்டு இறைவனின் பொருத்தத்தை நாடி செய்யும்படி கூறுகிறது. (தொடரும் இன்ஷாஅல்லாஹ்)

# குளிப்பைக் கடமையாக்கும் இறைமார்க்கம்

பொதுவாக மதங்கள் என்றாலே சடங்குகள் சம்பிரதாயங்கள் உபதேசங்கள் போன்றவை கலந்து இவற்றை பின்பற்றவும் செய்யலாம் விடவும் செய்யலாம் என்று பொத்தாம் பொதுவான நிலைபாட்டையே கொண்டிருப்பதைக் காணலாம். மேலும் நாத்திகர்களைப் பொறுத்தவரை இந்த விடயங்களில் அவர்களைக் கட்டுப்படுத்த எந்த விதிமுறைகளும் கிடையாது என்பதையும் நாம் அறிவோம். அதனால் சமூக ஒழுக்கம் என்பது நடைமுறை சாத்தியமற்றதாக காணப்படுகிறது. ஆனால் இறைவனின் மார்க்கம் என்பது வாழ்வில் ஒரு ஒழுங்குமுறையைப் பேணி வாழ வலியுறுத்துகிறது. இஸ்லாம் என்றாலே கீழ்படிதல் (***discipline***) என்று அறிவீர்கள்.

மக்களில் பலர் குளித்தல் என்பதற்கு எந்த முக்கியத்துவத்தையும் கொடுக்காதவர்களாகவே இருப்பதைக் காணலாம். சிலர் ஆன்மிகம் என்ற பெயரில் வருடங்களாகக் குளிக்காமல் ஜடைமுடி போட்டுத் திரிவதையும் காண்கிறோம். பலர் சோம்பேறித்தனத்தின் காரணமாக அதைத் தவிர்த்து வருவதையும் காண்கிறோம்.

ஆனால் மனிதனைப் படைத்த இறைவன் வாழ்வின் அனைத்து விடயங்களிலும் அவனுக்கு வழிகாட்டுகிறான். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஆண்-பெண் அனைவர் மீதும் தினமும் ஐவேளை தொழுகை கடமை என்பதை அறிவோம்.

- அந்த தொழுகை நிறைவேற வேண்டுமானால் “உளூ“ எனும் அங்கதூய்மை என்பது மிகமிக அவசியம்.
- மட்டுமல்ல, மலம் அல்லது மூத்திரம் போன்ற அசுத்தங்கள் உடலைவிட்டு வெளியேறினால் அங்கத்தூய்மை செய்வதற்கு முன்னதாக கட்டாயம் அவ்விடங்களை தூய்மை செய்திருக்க வேண்டும்.
- மலம், மூத்திரம் அல்லாத எவையேனும் பிறப்புறுப்பின் வழி வெளியேறினால் கட்டாயம் குளிக்கவும் வேண்டும். இந்த தூய்மை பேணப்படாமல் தொழுகைக்கு முற்படக்கூடாது என்றும் வலியுறுத்துகிறது இஸ்லாம்.
- குறைந்தபட்சம் வாரத்தில் ஒருமுறையாவது ஒவ்வொருவரும் குளித்தேயாக வேண்டும் என்பதை இறைவன் தனது தூதர் மூலமாகக் கட்டளையிடுகிறான்.
- இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

வெள்ளிக்கிழமை குளிப்பது பருவமடைந்த ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். (அபூசயீத் அல்குத்ரீ (ரலி) புகாரி 1535)

# வாசகர் எண்ணம்

● மார்ச்சு இதழில் 'வாழ்வின் எல்லா விடயங்களிலும் அவன் 'இறைவன்' கற்பிக்கும் ஏவல் விலக்கல்களை பேணி வாழ்வதுதான் அறிவுடைமையாகும். அவற்றை பின்பற்றி நடைமுறைக்கு கொண்டுவந்தால் மட்டுமே இவ்வுலகம் அமைதி மிக்கதாக அமையும் - இந்த நற்செய்தி சமுதாய செறிவுக்கு செம்மையான கருத்தாகும். அனைவராலும் உணரப்படவேண்டிய ஒன்றாகும்.

காதலை வெல்வோம் தலைப்பில் சொல்லப்பட்டுள்ள இல்வாழ்க்கை என்ற பரீட்சையில் சஞ்சலங்களுக்கு இடம் கொடாமல் காதலையும் காமத்தையும் கட்டுப்படுத்தி கவனமாக செயல்பட்டால் நாம் நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொர்க்கத்தை சென்றடையலாம் - என்ற செய்தி இன்றைய தலைமுறையினருக்கு இயம்பப்பட்டுள்ள இனிய இன்றியமையாத செய்தியாகும்.

காதலையும் காமத்தையும் கலந்து காட்டி மக்களின் கலாச்சார சீரழிவைப் பரப்பும் ஊடகங்களுக்கு சரியான சாட்டையடி கொடுத்து தாம்பத்தியத்தின் புனிதத்தை தெளிவுபடுத்தி இறுதியில் அப்பாவங்களில் இருந்து திருந்தும் வழியையும் இம்மலர் சிந்திக்க வைத்துள்ளது.

இன்றைய சமுதாயத்திற்கு சரியான காலத்தில் இறைவனால் சமைக்கப்பட்ட கருத்துப்பெட்டகம் இம்மலராகும்.

- பி.என். சுப்பிரமணியன், சென்னை -190

● விபத்தில் காலின் ஒரு பகுதியை இழந்த எனக்காக பிரார்த்திக்கக் கோரி எளியவன் நான் விடுத்த விண்ணப்பம் ஏற்று மார்ச் இதழில் எனது கடிதத்தை அன்புடன் வெளியிட்டிருந்தீர்கள். இதழ் வந்த நாளில் இருந்து இன்றுவரை ஏராளமான அன்பர்கள் எனது உடல்நிலை குறித்து தொடர்ந்து விசாரித்து வருகின்றனர். அவர்களுக்கும் தங்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

மார்ச் இதழ் பற்றி.... காதலுக்கும் காமத்துக்கும் வரம்புண்டா?- ஆசிரியர் உரையில் கருத்துக்கள் காலத்துக்கேற்ற ஆய்வுப் பார்வை. காதலை ஊக்குவிப்பது சரியா? - துண்டறிக்கையாக அச்சிட்டு அனைவருக்கும் அவசியம் வழங்கினால் பலருக்கு சரியான பாதை புலப்படும். அண்ணலாரின் பொறுமையை சோதித்த யூதரை மனம் மாறவைத்த கருணையாளராக நபிகள் விளங்கியது கண்டு நெஞ்சம் நெகிழ்ந்தேன். என்றும் அன்புடன் ...

- தஞ்சை என் ஜே கந்தமாறன், சென்னை

● தித்திக்கும் திருமறை நற்செய்தி மலரை படியுங்கள். அருகில் உள்ள

சகோதர சமயத்தவருக்குக் கொடுத்து படித்திட உற்சாகம் ஊட்டுங்கள். இல்லத்தினர் அனைவரின் பார்வைக்கும் படும்படியாக அழகாக அடுக்கி வையுங்கள். பலரையும் சந்தாதாரராக ஆக்கிடுங்கள், படியுங்கள்- பரப்புங்கள்- பாதுகாத்து வையுங்கள், வாசியுங்கள், வாழுங்கள்- வாழச் சொல்லுங்கள் – என்று இம்மலரைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.
ஹாஜி எம். ஷேக் தாவூது, மாணிக்கம்பாளையம், ஈரோடு

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

உற்சாகமூட்டும் கடிதங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள். எல்லாம் வல்ல இறைவன் நாம் மேற்கொண்டுள்ள சமுதாய சீர்திருத்தப் பணிகளை நல்லறங்களாக ஏற்பானாக. நம் இதயங்களை இணைப்பானாக! நம் அனைவரையும் நேர்வழியில் நிலைத்திருக்கச் செய்வானாக. மறுமையில் சொர்க்கம் செல்லும் நன்மக்களில் ஆக்கி வைப்பானாக!
அன்பர் தஞ்சை கந்தமாறன் அவர்கள் உடல்நலன் இறையருளால் முன்னேற்றம் அடைந்து வருகிறது. முழுமையாக குணமடைய வாசகர்கள் அனைவரும் இறைவனிடம் பிரார்த்திப்போமாக. – ஆசிரியர்

# சொர்க்கத்துப் பெண்மணி!

நபித்தோழர் இப்னு அப்பாஸ்(ரலி) என்னிடம், ‘சொர்க்கவாசியான ஒரு பெண்மணியை உங்களுக்குக் காட்டட்டுமா?’ என்று கேட்டார்கள்.
நான், ‘ஆம் காட்டுங்கள்’ என்று சொன்னேன்.
அவர்கள், ‘ இதோ இந்தக் கறுப்பு நிறப் பெண்மணிதாம் அவர். இவர் ஒரு முறை நபி(ஸல்) அவர்களிடம் வந்து, ‘நான் வலிப்பு நோயால் அடிக்கடிப் பாதிக்கப்படுகிறேன். அப்போது என் உடலிலிருந்து ஆடை விலகி உடல் திறந்து கொள்கிறது. எனவே, எனக்காக இறைவனிடம் பிரார்த்தியுங்கள்’ என்றார்.
நபி(ஸல்) அவர்கள், ‘நீ நினைத்தால் பொறுமையாக இருக்கலாம். இதற்கு பதிலாக உனக்கு சொர்க்கம் கிடைக்கும். நீ விரும்பினால் உனக்குக் குணமளிக்கும்படி இறைவனிடம் நான் பிரார்த்திக்கிறேன்’ என்று கூறினார்கள்.
இந்தப் பெண்மணி, ‘நான் பொறுமையாகவே இருந்து விடுகிறேன். ஆனால், வலிப்பு வரும்போது ஆடை விலகி என் உடல் திறந்து கொள்கிறது. அப்படித் திறந்து கொள்ளாமல் இருக்க இறைவனிடம் பிரார்த்தியுங்கள்’ என்று கூறினார்.
அவ்வாறே நபி(ஸல்) அவர்கள் இப்பெண்ணுக்காகப் பிரார்த்தனை செய்தார்கள். என்று அதாஉ இப்னு அபீ ரபாஹ்(ரஹ்) கூறினார்.

# சுற்றுலாக்களும் படிப்பினைகளும்

இயற்கை அழகை இரசிக்கவும் அவற்றில் அமைதியைக் காணவும் கோடைவாசத் தலங்கள் நோக்கி நாம் பயணங்கள் மேற்கொள்ளும் காலம் இது!

மலையும் மடுவும் ஆறும் அருவிகளும் அவைகளின் சலசலப்பும்.....

மரங்களும் செடிகளும் கொடிகளும் தென்றலும் வசந்தமும்....

காய்களும் கனிகளும் மலர்களும் மொட்டுக்களும் மகரந்தமும்.....

அப்பப்பா... நிறத்தாலும் மணத்தாலும் சுவையாலும் எவ்வாறெல்லாம் நமக்கு இன்பமூட்டுகின்றன அவை! பசுமைக் கம்பளத்தின் மீது வண்ணங்களை வாரித்தெளித்த மலர்களும் நம் தலைக்கு மேலே குடைபிடிக்கும் வான்முகில்களும் ஆரத்தழுவும் தென்றலும்.....என்றுமே தொடரக் கூடாதா இவை? என்ற ஏக்கம் ஒவ்வொருவருக்கும் இருக்கவே செய்கிறது. இருப்பினும் வாழ்வின் உண்மைகளை நாம் மறக்கவோ அலட்சியம் செய்யவோ முடிவதில்லை. இவற்றை விட்டு விட்டு மீண்டும் பிழைப்புக்காக ஊர் திரும்பியாக வேண்டும்.

ஆனால் இந்த தற்காலிக இன்பங்கள் பின்னால் வர இருக்கின்ற ஒரு நிரந்தர இன்பங்கள் நிறைந்த ஒரு வாழ்விடத்தின் ஒரு சிறு மாதிரியே (***sample***) என்பதை சிந்திப்போர் உணரலாம். அதைப் பற்றி திருக்குர்ஆனில் நம்மைப் படைத்தவன் இவ்வாறு கூறுகிறான்:

29:58 எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு, நற்காரியங்கள் செய்கிறார்களோ அவர்களை சதா கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதியிலுள்ள உயர்ந்த மாளிகைகளில், நிச்சயமாக நாம் அமர்த்துவோம். அவற்றில் அவர்கள்நிரந்தரமாக (நிலைத்து) இருப்பார்கள். (இவ்வாறாக நற்)செயல்கள் புரிவோரின் கூலியும் பாக்கியம் மிக்கதாகவே உள்ளது.

அந்த வாழ்விடம் தற்காலிகமானது அல்ல. நிரந்தரமானது.

43:71 பொன் தட்டுகளும், கிண்ணங்களும் அவர்களைச் சுற்றிக் கொண்டேயிருக்கும். இன்னும் அங்கு அவர்கள் மனம் விரும்பியதும், கண்களுக்கு இன்பம் தருவதும் அதிலுள்ளன. இன்னும், 'நீங்கள் இங்கு என்றென்றும் தங்கியிருப்பீர்கள்!' (என அவர்களிடம் சொல்லப்படும்.)

ஆனால் அங்கு செல்ல வேண்டுமானால் நாம் இறைவன் மீதும் அவன் தூதர்கள் மீதும் வேதங்கள் மீதும் நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் புரிய வேண்டும். அவ்வாறு செய்வோரையே பயபக்தியுடையவர்கள் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. இறைவனின் செய்திகளைப் புறக்கணித்து தான்தோன்றித்தனமாக நடந்தவர்களைப் போல ஆக மாட்டார்கள் என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

47:15 பயபக்தியுடையவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சுவர்க்கத்தின் உதாரணமாவது: அதில் மாறுபடாத தெளிந்த நீரைக் கொண்ட ஆறுகளும், தன் சுவை மாறாத பாலாறுகளும், அருந்துவோருக்கு இன்பமளிக்கும் மது ரச

ஆறுகளும், தெளிவான தேன் ஆறுகளும் இருக்கின்றன. இன்னும், அதில் அவர்களுக்கு எல்லா விதமான கனிவகைகளும், தங்கள் இறைவனின் மன்னிப்பும் உண்டு. (இத்தகையோர்) நரகத்தில் எவன் என்றென்றுமே தங்கியிருந்து, கொதிக்கும் நீர் புகட்டப்பட்டு (அதனால்) குடல்களெல்லாம் துண்டு துண்டாகிவிடுமோ அவனுக்கு ஒப்பாவாரா?

**இயற்கை அழகு இறைவனின் கைவண்ணமே!**

இறைவனின் உள்ளமை பற்றியும் அவனது திட்டங்கள் பற்றிய பாடங்களைத் தாங்கி நிற்கின்றன இயற்க்கை காட்சிகள்:

*3:190.* நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும் இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன.

*16:12.* இன்னும் அவனே இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் உங்க(ள் நலன்க)ளுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளான் அவ்வாறே நட்சத்திரங்களும் அவன் கட்டளைப் படியே வசப்படுத்தப்பட்டுள்ளன – நிச்சயமாக இதிலும் ஆய்ந்தறியக்கூடிய மக்கள் கூட்டத்தாருக்கு(த் தக்க) அத்தாட்சிகள் இருக்கின்றன.

*16:13.* இன்னும், பூமியில் அவன் படைத்திருப்பன பல விதமான நிறங்களையுடைய (செடி கொடிகள், பிராணிகள், பறவைகள், போன்ற)வையுமாகும் நிச்சயமாக இதில் (இறைவனின் அருட்கொடைகளை நன்றியுடன்) நினைவு கூரும் மக்களுக்கு அத்தாட்சியுள்ளது.

**வரலாற்றுச்சுவடுகள்**

அதேபோல சுற்றுலாக்களின் போது சரித்திரப்புகழ் வாய்ந்த பலவிதமான நினைவிடங்களையும் காண்கிறோம். நமக்கு முன்னர் இங்கு வாழ்ந்து சென்ற முன்னோர்களின் கைவண்ணங்களில் உருவான அவர்களின் மாளிகைகள், அரண்மனைகள், பாறைகளைக் குடைந்து அவர்கள் உண்டாக்கிய சிற்பங்கள், குகைகள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் என பலவற்றையும் நாம் காண்கிறோம்.

இவற்றில் இருந்து நாம் பெறும் பாடங்கள் என்ன?

நம்மில் பலரும் அவற்றில் கலை அழகு கண்டு வியக்கிறோம். அவர்கள் நம் நாட்டினர் என்பதற்காக பெருமை கொள்கிறோம். அதேவேளையில் நாம் சிந்திக்கவேண்டிய மற்றொரு விடயமும் உள்ளது...

அவர்களின் நிலை இப்போது என்ன? என்பதே அந்த சிந்தனை....

- அவர்கள் இப்பூமியில் தங்கள் வாழ்வு நிலையானது என்று எண்ணினார்கள். அதனால்தான் பாறைகளைக் குடைந்தும் தங்கள் வாழ்விடங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆனால் இன்று அவற்றில் அவர்களைக் காணவில்லை!
- அவர்களில் சிலர் தங்கள் செல்வம் தங்களை நிலைத்திருக்க வைக்கும் என்று எண்ணினார்கள். அதனால்தான் நாட்டு செல்வங்களை

அரண்மனைக்குள் சேமித்தார்கள். ஆனால் திரண்ட செல்வங்களை அனுபவிக்க அவர்களின் உடல்கள் இன்று இல்லை.

● தங்கள் புகழை நாடும் நாளைய தலைமுறையும் என்றென்றும் ஓத வேண்டும் என்று விரும்பியே கலைவண்ணம் மிக்க நினைவுச்சின்னங்களை சமைத்தார்கள். ஆனால் அதைக் காணவும் கேட்கவும் அவர்கள் இங்கு இல்லை.

● இறந்துபோன மனைவிக்கு பளிங்குக் கற்களால் மாளிகை கட்டி அழகுபார்த்தவர்களும் அவர்களில் உண்டு. அந்த மாளிகைகளின் அழகை ரசிப்பவர்கள் இன்று உண்டு. ஆனால் அவர்கள் இன்று இல்லை.

● தங்களை நீடூழி வாழவைக்கும் என்று தங்கள் இஷ்ட தெய்வங்களாகக் கருதியவற்றுக்கு சிற்பங்கள் வடித்தவர்களும் நம் முன்னோரில் உண்டு. அது பொய்க்கும் என்று அவர்கள் எண்ணிப்பார்க்கவே இல்லை.

ஆம் அன்பர்களே, இன்று சரித்திரங்களில் வைர வரிகளால் புகழப்படும் நமது முன்னோர்கள் தங்களுக்கு அப்படியொரு திடீர் முடிவுரை எழுதப்படும் என்றும் எதிர்பார்த்திருக்கவில்லை!

**ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் – இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 3:185)**

இந்த உண்மையையும் அவர்களில் பெரும்பாலோர் உணர்ந்திருக்கவில்லை என்பதுதான் நம்மை துக்கத்தில் ஆழ்த்துகிறது.

# புறம் பேசுதல் என்றால் என்ன?

புறம் பேசுதல் என்றால் என்னவென நீங்கள் அறிவீர்களா? என நபி (ஸல்) அவர்கள் கேட்டபோது, அல்லாஹ்வும் அவனது தூதரும் நன்கறிவர் என நபித்தோழர்கள் கூறினர். அப்போது நபி (ஸல்) அவர்கள், உன்னுடைய சகோதரன் வெறுப்பதை நீ கூறுவது தான் 'புறம்' என்றார்கள். நான் கூறுவது என்னுடைய சகோதரனிடம் இருந்தால் அதுவும் புறமாகுமா? என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள், நீ கூறுவது உன்னுடைய சகோதரனிடம் இருந்தால் நீ அவனைப் பற்றி புறம் பேசுகிறாய். நீ கூறுவது உன்னுடைய சகோதரனிடம் இல்லையெனில் நீ அவனைப் பற்றி இட்டுக்கட்டுகிறாய் (அவதூறு கூறுகிறாய்) என்றார்கள்.

(அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்)------------

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

- ஓராண்டு சந்தா : Rs. 60-
- ஈராண்டு சந்தா Rs.120-


Published from:

**House of Peace,**
PO Box no. 1726,
No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,
Bangalore 560017
**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**


## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்

கோலார் தங்கவயல்: சகோ.பஷீர் அஹ்மத் 9845217262
ஓசூர் : சகோ. ர.்.பீக் - 9994713191
தர்மபுரி: சகோ, அய்யூப் 9842627171
கோவை : சகோ. ஜுல்.்.பிகர்-8015714648
மதுரை: சகோ. ஆதில்- 9043967747
திருப்பூர் : சகோ. ஷேக் தாவுத் - 9150068919
திருச்சி : சகோ. திருச்சி முஸ்த.்.பா -9865446344
குன்னூர்: சகோ. அப்துல் ரகுமான் - 9843622246
சென்னை: அப்துல் அக்பர் .்.பிர்தௌசி- 9944656942
சேலம் : சகோ. இப்ராஹீம் - 9994091364
தஞ்சாவூர்,கும்பகோணம்: சகோ. அப்துல்சலாம் - 9597285160
விழுப்புரம்: சகோ. அப்துல் கனி - 9790290002
திருநெல்வேலி: சகோ. ரி.்.பாயி - 9840911985
ஈரோடு: சகோ. ஷேக் தாவுத் - 7373947869
மயிலாடுதுறை: சகோ. அமீர் ஹம்சா - 9942941190


Printed, published & edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, published from House of Peace, #8, 4th Main, 2nd cross, LB Sastry Nagar, Bangalore 560017 and printed at Print-O-Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No.KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No.KRNA/BGE/1057/2012-2014
posted at MBC Bangalore GPO b/w 25th to 27th of every month.
No of pages: 24+4

**(PRINTED MATTER)**

To

.....................................................................

.....................................................................

.....................................................................

.....................................................................

'கருஞ்சீரகத்தில் மரணத்தைத் தவிர அனைத்து நோய்களுக்கும் நிவாரணம் உள்ளது." என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல்கள்: புஹாரி, முஸ்லிம்)




SAFA கருஞ்சீரக எண்ணெய்
- 100% தூய்மையானது.
- கருஞ்சீரக விதையில் இருந்து நவீன முறையில் பிழிந்தெடுக்கப்பட்டது.
- 100 ml - Rs. 160- (தபால் செலவு தனி)

SAFA கருஞ்சீரக எண்ணெய் மற்றும் தேன் மொத்தமாகவும் சில்லரையிலும் வாங்க:
**Bangalore: 09740695461**
**Coimbatore:8489966877**